[1971 டிசம்பர் 16

Hospital at Theni-Alingar

* 458 *Q.*—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether it is a fact that there is only one Doctor in the Hospital at Theni-Alinagar; and

(*b*) if so, the steps taken by the Government to increase the number of Doctors to meet the increasing need?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு. கே. டி. கே தங்கமணி : தலைவர் அவர்களே, சமீபத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களே தேனிக்குச் சென்றிருந்தார்கள். அந்த ஆஸ்பத்திரி நல்லமுறையிலே செயல்பட்டுக்கொண்டு வருகிறது. ஒரே ஒரு டாக்டர் மட்டும்தான் இருக்கிறார், அது போதாது, ஆகவே இரண்டு அல்லது 3 டாக்டர்களாவது இருந்தால் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலிலே ஒரு டாக்டராவது அங்கே இருக்கவேண்டுமென்ற முறையிலே சொல்லப்பட்டு 7—5—1971 அன்று இருந்து டாக்டர் பாரதி என்பவர் நியமிக்கப்பட்டு செம்மைபெற்றுவிட்டது. இரண்டாவது டாக்டரும் வேண்டுமென்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இது நடைமுறைக்கு வரும்பொழுது ஒரு பெண் மருத்துவர் நியமிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். அதற்கு உரிய நேரத்திலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செவிலியர் பயிற்சிக்கு ஆண்கள்.

*** 459 வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மருத்துவத்துறையில் நர்ஸ் பயிற்சிக்கு ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படுவது எந்த ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவத் துறையில் நர்ஸ் பயிற்சிக்கு ஆண்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தற்காலிகமாக 1958-ம் ஆண்டு முதல் நிறுத்திவைக்கப்பட்டது. தற்காலிகமாக தொடர்ந்து வருகிறது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மருத்துவமனைகளில் ஆண் நர்ஸ்களுடைய சேவை மிக இன்றியமையாததாக இருக்கிறது. ஆண்டு தோறும் குறைந்தபட்ச எண்ணிக்கையிலாவது ஆண் நர்ஸ்களைத் தெரிந்தெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நர்ஸ் என்பதற்குத் தமிழிலே 'செவிலி' என்ற சொல்தான் பொருத்த மான சொல். அது குறிப்பாக பெண்களுக்குரிய சிறப்புச் சொல்லாகும். இந்த பணிக்கு பெண்கள் வராத காலம் ஒன்றிருந்தது. அப்பொழுது இதிலே ஆண்கள் ஈடுபடுத்தப் பட்டார்கள். இப்பொழுது ஏராளமாகப் பெண்கள் வருகிறார்கள். இந்த பணிக்கு என்பதால் ஆண்கள் இதிலே போட்டியிட மாட்டார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சார், மருத்துவமனைகளிலே இவ்வளவு படுக்கைக்கு ஒரு நர்ஸ் என்று விகிதாச்சாரம் இருக்கிறது. தற்போது இருக்கும் விகிதாச்சாரத்தை இன்னும் மாறுபடுத்த வேண்டுமென்று இது சம்பந்தமாக ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆண் நர்ஸ்களைப் பற்றிய கேள்வி. செலவென்பதாக இல்லையே, எப்படிப் பதில் சொல்வது ?

திரு. எம். சுரேந்திரன் : அந்த வகையிலே ஆண் நர்சுகளைப் பயிற்றுவித்து இன்னும் நர்ஸ்கள் அதிகமாகத் தேவைப்படுவதால், நர்சுகளுக்கு பங்கிடப்படும் இந்த படுக்கை விகிதாச்சாரத்தை மாற்றும் முறையில் அதிகப்படுத்தி, பெண் நர்சுகளோடு ஆண் நர்சுகளுக்கும் சேர்த்து பயிற்சியளிப்பது நல்லது அல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பெண்கள் இப்பொழுது பயிற்சி பெற்றவர்கள் கிட்டத்தட்ட 500 பேருக்கு மேல் 650 வரையில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர் களெல்லாம் நர்ஸ் பயிற்சி பெற்றுவிட்டு, ஏ.என்.எம். ஆக, அதை விடக் குறைந்த ஊதியத்தில் வேலை செய்கிறார்கள். அப்படிப் பயிற்சி பெற்றவர்களுக்கு முதலிடம் கொடுக்கக் கடமைப்பட்டிருக் கிறோம். ஆகவே, ஆண்களுக்கு இப்பொழுது இந்த வேலை கிடைக்காது.

தமிழ்நாடு அரசிதழைத் தமிழில் வெளியிடல்

*** 460 வினா.—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அரசாங்க கெஜட்டைத் தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்பமிகு திரு. என். வி. நடராசன் : தமிழ்நாடு அரசின், அரசிதழின் அனைத்து பாகங்களையும் தமிழிலேயே வெளியிட வேண்டும் என்றும், இதனை பல கட்டங்களில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், முதல் கட்டமாக அரசிதழ் பாகம் ஒன்றின் தமிழாக்கத்தினை வெளியிட எடுத்துக் கொள்ளலாம் என்றும் அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்துள்ளது.